





ஓலை 138| ஓசை 261| ஆகஸ்ட் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை




பேராசிரியர் இரா.சாரங்கபாணி

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**

## பொருள்

**ஊழியின் காரணத்தால் ஒரு செயல் செய்ய முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்!

## பா வகை: வெண்டாழிசை

கட்டை விரலினைக் குட்டைவிர லென்றிருக்கும்
முட்டையைத் தூக்கிடவே முடியாதவர் உணர்ந்திட
குட்டையர்செய் சீர்பணியே சிறப்பு.

**இலக்கணக் குறிப்பு:**
இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதில், முதலடி வெண்பாவடியால் தளை பிறழாமல் வந்து, மற்ற இரண்டு அடிகளிலும் வேற்றுத் வெண்டாழிசை இனமாகும். தளை கலந்து வந்ததால் இது




கடலில் முத்துக் கண்டு எடுத்தவன்
தடமும் மாறி கால்வாய் தன்னில்
நடக்கக் கற்பிப்போன் மேல்.

**இலக்கணக் குறிப்பு:**
முழுக்க முழுக்க ஆசிரியத் தளையால் வந்த வெண்டாழிசைப் பாடல்




சிறுதுரும்பும் உதவிடும்; பெரும்இரும்பும் உதவாது;
வறுமைவந்தும் நொடிந்தே வதைந்தும் பெருஞ்செயல்
சிறுவர்செய் செயலனைத்தும் சிறப்பு.

**இலக்கணக் குறிப்பு:**
இந்தப் பாடல் சிந்தியல் போன்ற சீர்களைப் பெற்று, முழுக்க முழுக்க கலித்தளையால் வந்த வெண்டாழிசை இனமாகும்.

## பா வகை: பஃறொடை வெண்பா

ஏற்றிய ஏணியை எட்டி உதைத்தலோ
சாற்றிய ஆசானைச் சாடுதல் போன்றதாம்.
ஆற்றல் உடையார்க்கே ஆறுதல் தந்திடுக
நாற்றாய் வளர்ந்திட நாளும் உழைத்தாரைப்
போற்றிடும் வாழ்வே பொருள்.



கவிஞர் செ. கலைவாணி

# உலக பெருங்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்

புரட்சி கவிஞன் புரட்டினான் பூமியை
மிரட்சி இன்றியே மீட்டினான் பாக்களை
உரத்த சிந்தனை உழுதது மனத்தினை
கருத்துச் செறிவை கவியில் பாடியே

பெண்ணின் விடுதலை பெய்த பாமழை
எண்ணிலா படைப்புகள் ஏற்றமாய் விதைக்கையில்
திண்ணிய உணர்வுகள் திறந்தது திசைகளை
பண்ணிலே எரிமலை படைத்தனன் புரட்சியே

குறிஞ்சித் திட்டு குடும்ப விளக்கு
அறிந்திட வேண்டும் அதிசிறந்த படைப்பு
பறிக்குமே மனதை பாண்டியன் பரிசு
முறித்தது பலவித மூடப் பழக்கமே




பாரதி பற்றினைப் பற்றினான் தாசன்
ஆரமாய் புதுமைகள் அணைத்த நேசன்
வாரண வலிமை வழங்கிய வரிகள்
தோரணம் பூட்டின தோல்வியில் எழுகவே

பெரியார் கொள்கை பெரிதும் ஈர்க்க
அரசியல் வழியே ஆவணம் செய்தார்
கரிசனத் தோடு கவிதைகள் பிறக்க
உரிமைகள் பெறவே உடுக்கை அடித்ததே

அமுதத் தமிழை அழகாய் பாடினன்
தமிழை உயிராய் தரணியில் போற்றினன்
கமுகாய் எழுத்தால் காலத்தை வென்றனன்
சமைத்தான் புரட்சியும் சாதிய மறுப்பிலே

கவிஞர் பூர்ணிமா சங்கர்

கற்போரும் கசடறவே கற்றல் வேண்டும் ;
கற்றாரும் அதற்கொப்ப நிற்றல் வேண்டும் !

குற்றங்கள் நிறைந்திட்டே வாழ்வார் பலரும்
கொள்கையாளர் என்றுதம்மை அழைத்தல் நன்றா !

பற்பலவாய் மேடையிலே முழங்கும் மாந்தர்
பாழ்பட்ட மனத்தவராய் இருத்தல் முறையா !

பிற்போக்கென் றேமரபை மாற்றிப் பேசல்
பெயர்புகழும் வாய்த்திட்டோர் நெஞ்சத் திமிரா !



சட்டத்தைப் பாதுகாப்போர் சட்டம் மீறல் ;
சரிந்திட்ட தீர்ப்பினிலே நீதி மன்றம் !

எட்டாத உயரத்தில் கல்வி வாய்ப்பு ;
. ஏக்கம்கொள் தரப்பினரோ மதுவில் மயக்கம் !

கட்டற்ற காமத்தின் கொடுமைக் கோலம் ;
கண்மயக்கும் காதலிலே தொலையும் வாழ்வு !

பட்டறிவு கொண்டிட்டால் தீர்வும் வருமே ;
படித்தபடி நடந்திட்டால் இன்னல் வருமா !

கவிஞர் ஆ.சு. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# காலத்தால் அழியாத வரலாற்று நாயகன்

**பா வகை: வெண்கலிப்பா**

ஏவுகணையின் அரிமாவே
எழிலார்ந்த ஞானியாம்
பூவுலகில் புதுமையையும்
புகுத்திட்ட தேனீயாம்

ஆடம்பரத்தை விரும்பிடாத
அனுஉலகின் நாயகனாம்
தேடலினால் தென்றலென
திசையெங்கும் பறந்தவராம்

வல்லரசாய் மலர்ந்திடவே
வாஞ்சையுடன் நாடியவர்
நல்மனதால் நலிந்தோரில்
நல்மனதை தேடியவர்

பசுமையான உலகிற்கு
பதியமிட்டு சென்றவரே
விசும்பினது வருகையையும்
வீச்சுடனே அழைத்தவரே

சோதனையில் சோராமல்
வேதனையும் உடைத்திட்டாய்
சாதனையின் பயணத்தில்
சரித்திரமும் படைத்திட்டாய்

எளிமையான நடையினிலே
ஏற்றங்கள் அடைந்தாரே
களிப்புடனே கனவினையும்
கனிந்திடவே குடைந்தாரே

பெருமையினை விரும்பிடாத
பெருமகனார் கலாம்ஐயா
அரும்புகிற ஆசையெல்லாம்
அணுவுலகம் ஒன்றேதான்

அண்டத்தின் வெளியினிலே
அணுவினையும் பிளந்தாரே
கண்டத்தை கடந்தேதான்
கனவுலகை அளந்தாரே



மாற்றுத்தி றனுடையோர்
மங்காத வாழ்விற்கு
பற்றுடனே பருமனின்றி
புதுமைக்கால் வடித்தீரே

சாற்றுகிறேன் பாமாலை
சாதனையின் நாயகனே
ஏற்றிடுவீர் எனதய்யா
எனதுகவி மாலையினை

மண்ணுலகில் மறவாமல்
மரங்களையும் நட்டிட்டார்
விண்ணுலகம் வியந்திடவே
விண்கலமும் ஓட்டிட்டார்

திண்ணமிகு திறமையால்
தீதின்றி உழைத்தவரை
எண்ணத்தில் மறவாமல் ஏற்று!

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி (கடலூர் மாவட்டம்)

# நிருபணத்தின் முடிச்சு



வேகமாக உரசுகின்ற
உன் உஷ்ணமூச்சுக் காற்றினை
அருகிலிருக்கும் நான்
சுவாசித்தலற்று
வேறென்ன செய்யமுடியும்.

அது
இரவைக் கொளுத்திவிட்டு
என் மீது கோபக் கணைகளை
தொடுத்துக் கொண்டிருக்கிறது.
உடல் முழுக்க வெப்பம் பரவ
பகலிடம் யாசிக்கிறேன்
எனக்கான குளிரின் தடங்களை.

மலரின் அழகில்
ஒளிந்திருக்கும் மௌனத்தை
வாசம் வைத்தே
உனக்கு வழியனுப்புகிறேன்.
நீரில் மிதக்கும் பந்தென
என்னில் மிதந்து கொண்டிருக்கும்
உன் ஞாபகஅலைகளை
என்ன செய்யட்டும் நான்.

வான் நோக்கிய மரத்தின்
வேர் பார்க்க விழைகிறாய்.
வீழ்த்திவிட்டு
வேர் பார்க்கவும் துணிந்த
துணிச்சல்காரி நீ.
அப்படி என்னாலாகாது.

பள்ளம் பார்த்துப் பதுங்கும்
நீரின் பாதையை
பள்ளத்தையே குறிவைத்திருக்கும்
எவரின் பார்வைக்கும் அகப்படாத
நீரின் கால்கள்.

உடைந்த இதயத்தின்
காதலைத் தைக்க
காற்று தீண்டாத
பூக்களைக் கேட்கிறாய்.
வானவில்லின் நிறங்களை
தனித்தனியே
பிரித்தெடுக்கச் சொல்கிறாய்.
எங்கெனக் கண்டுணர்ந்து
நானுனக்குப் பரிசளிப்பேன்!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம், வேலூர் மாவட்டம்

# பிள்ளையார் பேசட்டும்



1
தாரை தப்பட்டைகள் முழங்க
தெருவெங்கும்
வழிந்தோடுகிறது
உற்சாகத்தின் ஆட்டங்கள்.
வண்ணக்கயிறுகளில்
மாணவப் பிள்ளைகளின் கரங்கள் மின்னிக் கொண்டாட
காலம் காலமாய்
தன்னைக் கரைத்துக்கொண்ட
குளக்கரை மண்
ஏங்கி நிற்கிறது
புதிது புதிதாக முளைத்த மேடைகளில்
அருள்பாலிக்க நெகிழியில் அவதாரமெடுத்த
கடவுளைக் கண்டு.

2
இருப்பதன் அவசியம்
கரைவதன் அவசரம்
கொண்டாட்டத்தின் தீவிரம்
அருளப்போகும் ஆர்வம்
கடவுளாகும் கற்பனை
உற்சாகமாகும் மண்ணை
வழியனுப்பவும்
வரவேற்கவும்
காத்திருக்கிறது
குளக்கரை.

3
நீங்கள் மண்ணைப் பிசைந்து
பிடிக்கும் உருவத்திற்கு
பூச்சூடி பொட்டிட்டு
புத்தாடை உடுத்தி
உங்களுக்குப் பிடித்த
வடிவத்தைப் புகுத்தி
ஒப்பற்ற கடவுளென
வெளியில் வைத்து
கொண்டாடித் தீர்க்க
விருப்பமோ இல்லையோ
காலமும் இடமும்
தொலைத்த மண்ணைத் தேடி
அலையும் நதிக்கு
ஆறுதலாவது சொல்லட்டும்
உங்களின் கனவுக் கடவுள்.

4
கொண்டாடித் தீர்த்த பிறகு
வேறென்னவாவது செய்யுங்கள்
கரைக்க வேண்டி
மிதிக்கவும் உடைக்கவும்
போடும் கும்மாளம்
தண்ணீருக்கு வலிக்காதா என்ன?

கவிஞர் இளையவன் சிவா

# பள்ளி

மாணவர்கள் கற்கும் மாண்பமை இடமாய்
காணும் விதமாய் காட்சியும் பெருக்குதே
அறிவை பெருக்கி அடக்கமும் கனியாய்
கற்பிக்கும் இடமாய் கனியுமே உலகில்

பெற்ற அறிவை பெருக்கி அளிக்கும்
உற்ற துணையின் உண்மை வழியே
ஏட்டுக் கல்வி ஏழ்மையைப் போக்கி
ஊட்டும் விதமாய் உன்னதம் மொழியாய்



ஆசானின் அன்பும் அளவிலா பெருகி
பேசும் வகையில் பெருமையும் கொள்ளுமே
அறிவை பெருக்கி அறிஞராக மாற்றி
திறனை தந்தே திறமைகள் கூட்டிடுமே

ஆசானின் அன்பும் அளவிலா பெருகி
பேசும் வகையில் பெருமையும் கொள்ளுமே
அறிவை பெருக்கி அறிஞராக மாற்றி
திறனை தந்தே திறமைகள் காட்டிடுமே

அனைத்து செல்வத்தைவிட அளவிட முடியாத
இனித்த கரும்பாய் இனிக்குமே வாழ்வில்
செல்லும் இடமெல்லாம் செழிப்பைத் தந்தே
வெல்லும் விதவித வெற்றியை காட்டுமே

விழிப்புணர்வு பெருக்கி விந்தைபல புரியும்
செழிப்பான வளத்தை சிறப்பில் தந்திடுமே
அனைத்து சலுகையையும் அனைவர்க்கும் அளித்து
நினைக்கா பேற்றையும் நிறுவுதே அரசும்

அரசுப் பணிக்கான அச்சாணி படிப்பை
உரமாய் தந்தே உற்சாகமும் ஊட்டுதே
ஒளிமயமான எதிர்காலம் ஒவ்வொரு நாளுமே
மிளிரும் வாழ்வை மேதினியில் தந்திடுமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# இழந்த தருணங்கள்

குழந்தையாய் இருக்கும் போது.
பேச தவறிய நான்.
இப்போது பேசுவதற்கே அச்சம் கொள்கிறேன்.
பள்ளியில் முதல் மதிப்பெண் எடுக்க.
வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே.
என்னுள் ஓடினாலும் அதற்கான முயற்சியை.
மேற்க் கொள்ள தவறிவிட்டேன்.
அதன் வலியை தினமும் அனுபவிக்கிறேன்.
பல மேடையில் பேச வாய்ப்பு கிடைத்தும்.
அந்த தருணத்தை பயன்படுத்தாமல்.
தற்போது வாய்ப்பை தேடி அலைகிறேன்.
இளமையில் கல் என்பதை மறுத்துவிட்டு.
முதுமையில் அவதிப்படுகிறேன்.
விளையாட்டு வீர பெண்மணியாய்.
வெளி வர வேண்டும் என்ற.
சிந்தையில் இருந்த நான்.
பெண் பிறவி எடுத்ததால்.
வீட்டிற்குள்ளே முடக்கப்பட்டேன்.
வெளியுலகம் தெரியாமலே
வாழ்க்கையை கழிக்கிறனே.



கவிஞர் மோனிஷா

# அறன் வலியுறுத்தல்



மாந்தருக்குச் சிறப்பையும் செல்வத்தையும் தருவது அறமே
வேந்தராலும் வழங்க முடியாத சிறந்த வரமே

அறம் செய்யும் நன்மை ஒருவனுக்குப் பெரிதே
மறந்தும் செய்யத் தவறின் கேடும் உரித்து
.
விழுந்த இடமெல்லாம் முளைக்கும் விதை போலே
எழுந்தருளும் இடமெல்லாம் அறஞ்செய்து தடம் பதித்திடுக

தனக்குத்தானே குற்றமில்லாது  இருத்தலே சிறந்த அறம்
சுற்றத்திற்காக செய்வன எல்லாம் வெற்று ஆரவாரமே

பொறாமை, ஆசை ,சினம் ,  கடுஞ்சொல் நீக்கலே அறம்
பொறுமையோடு வினை புரிதலே அறத்தின் திறம்

இன்று இளைப்பாறுவோம் என்று இல்லாமல்
அன்றன்றே செய்யும் அறத்திற்கு இல்லை இணை
நன்றே செய்திட்டால் இறப்பின் போதே நிற்கும் துணை

நல்லறத்தினால் விளையும் பயன்கள்  இத்தனைமைத்து எனப் பகர்தல்
பல்லக்கில் அமர்ந்தவன் பெற்ற சுகமும் சுமப்பவன் பெற்ற சுமையும் நிகர்த்ததே

நாளும் ஒருவன் செய்யும் அறத்தின் பயன் எனச் சொல்லலே
நீளும் பிறவியின் துயரில் வழியடைக்கும் கல்லே

அறத்தோடு பொருந்தி வாழ்வதே இன்பம்
புறத்தே மற்றதோடு வருந்தி வாழ்தலே துன்பம்

அறச் செயல் செய்வதைக் கூட்டிக்  கொள்க
மறமாய் பழிச்செயல் புரிவதை கழித்தே வெல்க

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

மலை மீது கண்டேன்
ஒரு மா மருந்தை!
கருத்தாய் எனை காத்திட
தாய் என தத்தெடுத்தென்
வல்வினை தொலைத்து,
நல்வினை விளைவித்தென்
பழவினை கிழங்கை
பிடுங்கியே எறிந்தென்
அறிவினில் புகுந்து
மருள் நீக்கும் மருந்தே!
மருதமலை தெய்வமே!
முத்திக்கு முதல்வனே!
சின்மய ரூபனே!
எத்திக்கும் உன் பதம்
சித்திக்கும் என ஒரு
சத்தியம் ஒன்றையே வேண்டினேன்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# சுழல் காட்சிப் பிழை?

நரை விழுந்த மரம்
நினைவிழந்த மண்
நீர் இல்லாமல்.

இரைப்பை நிரப்ப
இருப்பை விதைத்து
இல்லாமை நீக்கும் உழவு.

வைகறையில் நிலா
மயக்கத்தில் கதிர்.
விழி வரைந்த ஓவியம்
பேசமால் செல்ல.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# கல்லை கனியாக்கிய காதலே!


செங்காந்தள் மலரே
செவ்விதழ் ஓவியமே
செழுமையான இளமையே
செப்பிடும் தீந்தமிழே

மல்லிகையின் நறுமணமாய்
மனதில் நிறைந்தவளே
முல்லையாய் சிரித்து
முழுமதியாய் ஆனவளே

வாடாமலர் வதனமே
வாசமுள்ள மரிக்கொழுந்தே
செம்பருத்தி பூவாட்டம்
செவந்திருக்கு சிற்றிடையுமே

கனிவானக் காதலால்
கல்லைக் கனியாக்கியவளே
இதயத்தில் இனிமை
இல்லறத்தில் நல்லறமே

புருவத்தின் வளைவால்
அம்பெய்து செல்கிறாயே
நெஞ்சத்தில் மஞ்சம்
உன்னிடத்தில் தஞ்சம்



தேன்சுவை கன்னமே
தேவதையின் அம்சமானவளே
பருவத்தின் எழிலால்
பாசத்தில் வீழ்த்தியவளே

உள்ளமும் உருகுதடி
உயிரில் கலந்ததடி
கார்குழல் காரிகையே
காந்தமாய் கவர்ந்தாயே

விம்மிடும் அழகினில்
வியப்பானேன் அன்பே
மாற்றமது என்னிடமே
மயங்கினேன் உன்னிடமே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தின், விருதுநகர்

# நினைந்தவர் புலம்பல்

## அதிகாரம் : 121



உண்டால் மட்டும்
கிறங்கடிக்கும் கள்ளைவிட.
நினைந்தாலே போதையாக்கும்
காமமே சிறந்ததாமே.

காதலனை நினைந்திருக்க
துன்பமே இல்லையாமே.
எனில் இன்பந்தரும்
காதலே மேன்மையாமே.

எனக்கு தும்மல்வந்து
பின்அடங்கிடும் பட்சத்தில்.
என்னவன் எனைநினைப்பதாய்
நினைக்க மாட்டானோ?

என்மனத்தினுள் என்றுமே
அவன் இருப்பதுபோல்.
அவன்மனதிலும் நீங்காது
நானிருக்கின்றேனா என்றறியேனே.

அவன் மனதினின்றென்னை
வெளியேற்றிட நினைப்பவன்.
என்மனம்நிறைந்து அவனிருப்பது
அறிந்திட்டால் வெட்கமுறுவானே.

நான் காதலனுடன்
கூடி மகிழ்ந்ததெண்ணியே.
உயிர்வாழ்கின்றேன் இல்லையேல்
மடிந்து போயிடுவேனே.

அவன்பிரிவை நினைக்கவே
மனங்கொதிக்கிறதே எனில்.
அவனை மறந்திடின்
நான் உயிர்வாழ்வேனோ?

எத்துணை நினைந்திடினும்
என்னை சினங்கொள்ளான்.
இஃதே அவனெனக்கு
செய்யும் நன்மையாமே.

நாமிருவரும் வேறல்லரே
ஒருவரே என்றொருமுறை.
அவனுரைத்த தெண்ணியெண்ணி
என்னுயிர் அழிகிறதே.

வான்மதியே என்நெஞ்சில்
வாழுமவனை உன்கண்ணில்.
காணும்வரை வானின்று
நீ மறையாதிருப்பாயே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# இணையம்

இணையத்தின் இருளில்
நிழலாய் இளமையின்
பயணம்

இணையத்தின் இதழ்களில்
எச்சிலாய் இளையோரின்
வாழ்க்கை

இணையத்தில் எழுந்து
இணையத்தில் தொலையும்
முகங்கள் இன்று அதிகமாய்

இணையத்தின் முகவரியில்
தேடப்படும் குற்றவாளியாய்
இன்றைய சமூகம்

இணைய பக்கத்தில்
பாலியல் பக்கங்களாய்
பலரது வாழ்க்கை பாதை

இணையம் இன்றைய
நாட்களில் பலரது குடும்பத்தின்
பயங்கரவாத முகங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# சிறந்த உறவு

வாய் நிறைய புன்னகை தந்து
குதுகளிப்புடன் மீண்டும்
வலியான பிரிவை தருவதுதான்
காதல் உறவா?

அனுதினம் பல முகங்களை காட்டி விட்டு
நெஞ்சோடு சுமக்க
மீண்டிடா வழியில்
அன்பை தருவது சிறந்த உறவா?




உனக்காக நான் இருப்பேன்
எதுவானாலும் தாங்கி பிடிப்பேன் என
பாசாங்கு கதை கூறிவிட்டு
செல்வது தோழமை உறவா?

வார்த்தைக்கு வார்த்தை தைரியமூட்டி
கடைசியில் கை விடுவதும்
சுமக்க முடியாத பாரங்களை
சுமக்க வைப்பதும்
தொப்புள் கொடி உறவா?

தளர்ந்து விடாதே
எல்லாம் நல்லதுக்கே என்று கூறி
நம்பிக்கை ஊட்டி ஏமாற்றாதே
உறவென்றால் அது இறைவனோடான
உறவின் பலமே சிறந்த உறவு

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

# எல்லாமே என் சாயி

சாய்பாபா
வியாழக்கிழமை
விரதம் இருந்து
பக்தியுடன் சாயி
வணங்கும் போது
நினைத்த காரியம்
கை கூடும்.
பாபாவின் உதி
சக்தி வாய்ந்த
சிவனின் திருநீறுக்கு
சமமானது.
சாய்பாபாவின்
பஜனையில் ஆராத்தி
பாடல்கள்
கேட்கும் போது,
என் மனதையும் உருகி
பக்தியில் சாயி பாதத்தில் சரண்
அடைகிறேன்.
பாபா உனக்கு பிடித்த
பலகாரங்கள் வைத்து
படைக்கும் போது
மனதில் துளியும் சஞ்சலமில்லாமல்
உன் பாதம் சரண் அடைகிறோம்.
சாய் நாமத்தை உச்சரிக்கும் போது
மனதில் துணிவும் தன்னம்பிக்கையும் உதிக்கிறது.



ஓம் சாய் ராம் ஸ்ரீ சாய் ராம் ஜெய் ஜெய் சாய் ராம்

கவிஞர் மா. நந்தினி, சேலம்

# புதியதோர் உலகம் செய்வோம்

உனக்குள் தூங்கும் வீணையை மீட்டு.
வாழ்வின் சிகரங்களில்
உன்னதங்களையேத் தொட்டு.



உதயங்கள் தேடி - அதிகாலை
தூக்கம் தொலை.
அதுவே மிகப் பெரிய கலை.
உறக்கத்தில் விளையும்
கனவுகளைத் தொலை..
ஆட்டுவிக்கட்டும் நெஞ்சின் அலை.

உழைப்பின் ஊதியங்களுக்காய்
உயரட்டும் விலை.
உயர்ந்தே நிற்கட்டும் வளர்ந்த மலை.
வடிப்போம் விருட்சமாய் உண்மைகளின் சிலை

அறிவைப் பண்படுத்தி
ஆற்றலைச் செம்மைப்படுத்தி
செய்திடுவோம் அதிகமாய் ஆதங்க உற்பத்தி.

உழவின் உயர்வில் உச்சம் கண்டிட.
உண்மை உழைப்பில் வேகங்கள் தொற்றிட.
செய்யும் பணியில் செவ்வனே சிறந்திட.
வாசல்கள் தோறும் வாசங்கள் பெற்றிட.
வரங்கள் வழங்கும் ஆதவனும் இறங்கிட.

தொட்டதெல்லாம் விண்ணின்
விளிம்பிற்கே வழிந்திட.
நோய்கள் அகற்றி நலன்களே பெருகிட..
எட்டுத் திசையும் எம்மொழி முழங்கிட.
ஆசைகளின்கரையோரங்கள்
நந்தவனங்களாய் பூத்திட.

நதிகள் ஆறுகள் கரை புரண்டோடிட.

தொழிற் புரட்சி கண்டிடுவோம்.
வினாக்களுக்கும் கனாக்களுக்கும்
விடையளிப்போம்.
கவிழ்ந்த வானில் கழனிகளை சிறப்பித்தே
கலைக்கும் கானத்திற்கும் உய்விப்பினை தந்தே

அறிவியல் புரட்சியும் வான்வெளிக்
கோள்களைத் தொடும் வேள்விகளும்
இந்த நாட்டினை மீட்டிப் பண் பாடட்டுமே

உழைப்பின் உன்னதங்கள்
எழுச்சிகளின் கீதங்கள் எங்கும் முழங்கிட
.சுரண்டல்களைச்சுரண்டி சுரங்கங்கள்
தேடுவோம்
எல்லோருக்கும் எல்லாமும்
சம நிலை உணர்த்தியே

புதியதோர் உலகம் செய்வோம்!

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# புத்தகக் காட்சி

தமிழீழத்து
சோகம் சொல்வேன்!
இமயம்வென்ற
தாகம் சொல்வேன்!

துறைதோறும்
மார்க்கம் சொல்வேன்!
நேற்றைய
தன்மை சொல்வேன்!

நாளைய
நிகழ்வு சொல்வேன்!
நம்மினத்து
மாண்பு சொல்வேன்!

போற்றிடும்
வீரம் சொல்வேன்!
முறையான
காதல் சொல்வேன்!

மனம்மாற்றிடும்
மேன்மை சொல்வேன்!
வாழ்தலின்
அர்த்தம் சொல்வேன்!

தூற்றிடும்
குற்றம் சொல்வேன்!
வருகின்ற
கேடு சொல்வேன்!

வளர்சிக்கு
ஈடு சொல்வேன்!
உருகிடும்
காட்சி சொல்வேன்!

உழைக்கின்ற
மாட்சி சொல்வேன்!
மயக்கம்நீக்கும்
மதுவகை நான்!

உங்கள் தனிமையிலும்
உறவாவேன்!
எழுத்து தானென்
உருவம்!

மொழி பேதம்
எனக்கில்லை!
காகிதங்கள்
எனக்கான சிம்மாசனம்!



கவிஞர் கவி. சுகரத்னம், (இர. தியாகராசன்)

# பொருளாதாரம்

ஆதாரம் என்றால் பொருள்தானே
இங்கு அது இல்லை என்றால்
ஏழை தானே
வாழ்வு பிரழ
வாழ்க்கை அரண்டு போய்
தப்பிப் பிழைக்கும் கைங்கைரியம்
இன்று சீறற்று கிடப்பதும் ஏனோ

கடனும் தனிசுமாய் சுமையும் வடுவுமாய்
சுடு பட்ட இலங்கைக்கு
ஒத்தடம் இல்லையே
இங்கு வைத்தியமும் இல்லையே




கால் வயிறு நிரம்ப
அரைக்குடம் தண்ணீர் முடிகிறது
கால்கிலோ அரிசி கஞ்சிக்காய்
மனம் அலைகிறது

வேப்பிலை கசப்பாய்
பொருள் ஆதாரம் - இங்கு
இருப்போருக்கு இரக்க மனமில்லை
புசிப்போருக்கு உண்ண உணவில்லை

சொல்லொன்னா சேதாரம்
அங்கே பொருளே ஆதாரம்
சேற்றில் மிதக்கும் நாட்டை
காப்பதற்கான போராட்டம்
ஒவ்வொருவரும் மனமுவந்தால் முடிந்திடும்

கவிஞர் முஜீபா, இலங்கை

# வாழ்க்கை

தேவைக்கு பணம்
உழைக்க தினம்
நினைக்குது மனம்
வளர்ந்திட எனும்
வார்த்தையில் பெருக்கம்
அளவிட நானும்
வாழ்ந்திட போதும்



கவிஞர் ஆனந்தி அழகேசன், அருப்புக்கோட்டை

# வறட்டு கோவணம்

கோவணம் கூட இல்லாத
முதிர்ந்த கிழவனின் இழவுக்கு
வீட்டில் குவிந்தன
பட்டு சரிகை வேட்டிகள்



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# கனிந்த காதல்



அரிதாரம் எதுவும் பூசாமல்
சிக்கென ஒட்டிக் கொள்கிறது
உனது புன்னகை!

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம்
வண்டி வண்டியாய்
மை பூசி மருதாணி இட்டு
குழல் கோதி வாசனை தெளித்து
எண்ணத்தில் கன்னம் வைத்து
எதிர்பார்ப்பில் சின்னம் வைத்து
விழித்தொடுக்கும் மோகமெல்லாம்
சிறிதும் இல்லாமல்
அரிதாய் நடக்கும் உனது சந்திப்பு முடிந்த பின்பும்
தழும்பி வழிந்நபடி இருக்கும்
நீ விட்டுச் சென்ற அன்பிற்கு
பொருத்தமான பெயர் எது எனத் தெரியாமல்
புலம்புகிறது என் இதயம்!

காத்திருப்பில் கனிந்து
பூத்த பின்பு தெரிகிறது - அது
காதல்!

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# நானும் அவனவள் தான்

என்னதான் ருக்மணி
கிருஷ்ணரின் மனைவியானாலும்
காதலியைதானே மக்கள்
நினைவில் கொள்கின்றனர்.
ராதே கிருஷ்ணா! ராதே கிருஷ்ணா!



அவன் அதரம் விட்டு வெளிவரவில்லை
அவன் இமைகளின் ஓரங்களில்
நான் பார்க்கும் என்னவனிடம்
அவனின் அவள் இருப்பதை.

அவனருகில் விரல்படும் தொலைவில்
விருட்சமாய் படர்ந்த நான் இன்று
தொலைவாகினேன்.

என்றோ தொலைத்தவளின்
நினைவில் அவன் வாழ்கிறான்.
இதயம் வலித்தாலும் இதை எழுதியே ஆகிறேன்
நானும் அவனுக்கானவள்தான்.

ஏனோ பிறையின் பின் மறைந்தேன்
இரவோடு நிழலாய்.
கணத்த தலை பாரத்தில்
இரவின் விழி துயிலின்றி அவனருகில்.


விழித்தே வறுத்துகிறேன் எனை நானே.
கைகளில் மிதக்கும் கனவாய்
நானே மிதக்கிறேன்
அவன் காதல் நான் தான் என்ற
பெருமித்தில்.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# விழி தேடும் இமை!

கருவிழியால் கோர்த்த மாலையோ
கண்ணயராது பார்த்த ஓவியமோ
கண்ணிலே எனை கணித்த
இதய மின் வரைவியோ!

மனம் கதைக்குது நினைவுகளில்
உயிர் பிறக்குது புதிதாக!
நினைத்ததும் கண்களில் உலவுபவளே
நீரில் அரும்பிய தாமரையே!



கதிரவன் கண்ணயரும் நேரமிது
விண்ணெங்கும் ஒளிக்கீற்றாய் மாலை
மறையுமுன்னே தடம் பதிக்கும் பொழுதிது!

இரவுகள் நீளும் உன்னாலே
கண்களும் கனா காணும்
கண்ணயராமலே மனம் தேடும் பொழுதிது!

நிமிடங்கள் கரைந்தது உன்னோடு
தூரல் சிந்தும் கருமேகமாய்
ஒலியின் வேகமாய் பறக்கும் காலமிது!

நொடிகள் கடக்கிறது வருடங்களாய்
நீள்கின்றன பகலும் இரவும்
உந்தி தள்ளுதே மனம்
கால இயந்திரத்தில் பயணிக்க!

முத்துக்கள் இல்லா கொலுசாக
ஒலியில்லா ஒளியாய்
உழலும் கண்களில் விழி வில்லையாக
ஒலியில்லா காதணியாய்
உன்னோடு நானிருக்க விழைகின்றேன்!
இமையில்லா விழியாய் காத்திருக்கின்றேன்!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# நிச்சயமில்லை

காற்று வீசுகையில்
கைவிடுகின்ற மனிதர்கள்
புயல் வீசுகையில்
புறப்பட்டு வருவார்களென்பது
நிச்சயமில்லை!




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# காதல் வெட்கம்

உன்னை நெருங்கும் முன்னே
ஒத்திகை பார்த்தேன்
சீரான இடைவெளியில்
வார்த்தைப் பிரயோகத்தினை
பரிசோதித்துக்கொண்டேன்
உளறல்கள் இருக்காது
உதறல்கள் இருக்காது
என்று கர்வம் கொண்டேன்



உன்னுடனான
மொழி உரையாடல்
இவ்வளவு விரைவாக
தீர்ந்துவிடும் என்று நினைக்கவேயில்லை
மௌன நொடிகளுக்கான
ஒத்திகை இன்றி
சற்று மிகையாகவே தடுமாறினேன்

அனிச்சையாய்
இந்த இடைவெளியில்
நம் விழிகளின் வார்த்தை கடத்தல்
உள்ளெங்கும் என்னமோ செய்கிறதே
உடலெங்கும் படபடப்பு கூடுகிறதே
காதல் வெட்கம் இதுதானோ!

கவிஞர் முனைவர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# சிரிப்பு

உன் சிரிப்பில்
உன்னை நீயே புதைத்து விடு

உலகில் யாரையும்
நீ நலம் விசாரித்தால்
உன்னை நலம் விசாரிக்க
எவருமில்லை என கலங்கி விடாதே


உந்தன் சிரிப்பிலே நீயே
உன்னை புரிந்துக் கொள்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# நீ இல்லா ரணங்கள்

நீயில்லா விடியல்கள்
புது வசந்தமிட மறுக்கின்றன
நீயில்லா இரவுகள்
இமை மூட மறக்கின்றன
நீயில்லா அந்தி மாலைகள்
தனிமையில் தேநீரும்
அருந்திட தடுக்கின்றன
நீயில்லா நேரங்கள்
சலனமற்ற சங்கதிகளை
பிறப்பிக்கின்றன
நீயில்லாமல்
இயற்கையில் இத்தனை
மாறுதல்கள் எனின்
நானும் இல்லையெனில்
முழுப்பிரபஞ்சமும்
வெறிச்சோடிடுமோ!



கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# கல்யாண வாழ்த்து

உணர்வினை மதித்து
உரிமைக்கு இடமளித்து
ஐயந்தெளிந்து
அன்போடு வாழ்க!

அகிலம் போற்ற
இனிதாய் வாழ்ந்திடுக!

மனம்போல மாங்கல்யம்
மன்றத்தில் வாழ்த்துக்கள்!
மழைபோல் பொழிய

மலர்மாலை சூடி
மகிழ்வோடு வாழ்க!



மாங்கல்ய பந்தம்
மாலையிட்ட உறவு
மகத்தானது - அது
மகிழ்வோடு துணையானது!

அழகான வாழ்க்கை!
அன்பான உலகம்!
அறிவோடும் அன்போடும்
ஆண்டாண்டு வாழ்ந்திடுக!

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# மருமகள்

குனிந்த தலை நிமிராத
மருமகளை கேட்கவில்லை.
குணம் மிக்க பெண்ணாக வர கேட்கிறோம்.

வரதட்சணை தேவையில்லை,
வாயார மகிழும் வார்த்தைகளை தரும்
மருமகளை கேட்கிறோம்.



மெத்த படித்த மருமகளை கேட்கவில்லை.
குடும்பம் நடத்தும் குலமகளாக கேட்கிறோம்.
பணக்கார மருமகளை கேட்கவில்லை.
அனைவரையும் அரவணைத்து செல்லும்
மருமகளாக கேட்கிறோம்.

அதிக செலவு செய்யும் பெண்ணாக கேட்கவில்லை.
வரவு அறிந்து செலவு செய்யும் பெண்ணாக கேட்கிறோம்.
புறம் கூறும் மருமகளை கேட்கவில்லை.
புத்திசாலி பெண்ணாக கேட்கிறோம்.

இது என் குடும்பம் என்று
பேர் சொல்லும் மருமகளே
வருக! வருக! வருக என்று வரவேற்கிறோம்.

கவிஞர் ஆ கிருஷ்ணவேணி ஊத்தங்கரை



ஒற்றுமைக்கு என்றுமே
உயர்வு உண்டு உண்மையே
சேர்ந்து வாழும் தன்மையே
சீர் தூக்கும் வாழ்வையே!


அன்பு என்ற ஒன்றுதான்
அகிலம் போற்ற உயர்த்துமே
ஒற்றுமை என்ற உயர்வே வேண்டும்
வாழ்வில் உயிராய்!

கூடி வாழும் தன்மையே
கோடி நன்மை தந்திடுமே
உறவைப் போற்றும் குணமே
உயிருக்கும் மேலே என்பது உண்மையே!

உறவுக்கு கை கொடுத்து
*உரிமைக்கு குரல்* கொடுத்து
நேர்மை என்னும் வாழ்வையே
நிலையாக கொள்வோமே!

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# விநாயகர்



அன்னை பார்வதியின் அருந்தவப் புதல்வன்
ஆடல் நாயகனின் ஆசைப் பாலகன்
ஆறுமுகனின் அண்ணன்
அருகம்புல் ஆண்டவனே
அன்னையும் பிதாவும் அகிலம் அன்று
அனைவருக்கும் உணர்த்தியவன்

எளிய வடிவானவன்! எதிலும் முதலானவன்!
அற்புதம் புரிபவன்! எங்கும் இருப்பவன்
சின்னக் குழந்தைகளின் செல்லத் தோழன்
சிறப்பைத் தந்திடுவாய் ! செல்வவளம் பெருக்கிடுவாய்

அறம் பொருள் இன்பம் அனைத்தும் தருவாய்
சோகங்கள் நீக்கி சுகம்தனை அருள்வாய்
அன்பின் சொருபமே ! அன்பின் சொருபமே
ஆணை முகத்தோனே ! ஆணவம் அழித்தோனே!

கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

முகஞ்சுளித்து இழிபேசிமோ
ஊர்வன கண்ட பார்வைதனில்

உனக்குள் உண்டு
அதற்கும் உண்டு
எதற்குள்ளும் உண்டிங்கு
கல்லென கள்ளம் பறையுமோ

நித்தம் விடியலில்
கதிரொளி தெளித்திடும்
ஞாயிறும் கடவு(உ)ள்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# அன்பு

தோட்டத்தில் மலர்வதல்ல
தேடியோ திருடியோ பெறுவதல்ல
கேட்டுப் பெறுவதல்ல
விலை கொடுத்து வாங்குவதல்ல
ஒவ்வொருவரினதும் உள்ளமென்னும் உயர்பூந்தோட்டத்தில்
உருவாகுவதே அன்பு!
***

அண்ணல் காந்தி
அந்நியனுக்கு எதிராய்
இந்திய மண்ணின் விடுதலைக்காய் ஏந்திப் போராடிய
எல்லையில்லாச் சக்தி கொண்ட அகிம்சை என்னும்
பேராயுதமே அன்பு!
***



அன்னை தெரேசாவின்
அவனிபுகழ் டயானாவின் பெரும் புகழுக்குக்
காரணம் பெண்மணிகள் அவர்கள் ஏனையோரின் மீது
வைத்த உன்னதமான அன்பு!
***

தரணியிலே உயரிய சக்தியாய்
அன்னை தந்தை ஆசிரியர்களின் அடிநாதமாய்
ஏகனான
ஆண்டவனின் வடிவமாய் விளங்குவது அன்பு!
***

ஆன்றோர்களின் கீர்த்திக்கு அத்திவாரமாய்
சான்றோர்களின் சால்பிற்குக் கருவாய்
எதனாலும் சாதிக்க முடியாததைக் கூட
எளிதிலே சாதித்து முடிக்கும் சக்தியாய் மிளிர்வது அன்பு!
***

அகிலமெனும் சக்கரத்தின் அச்சாணியாய்
ஆண், பெண் எனும் இரு உள்ளங்களை
இல்லற பந்தத்தில் இணைத்து வைக்கும்
அரும்பெரும் பாலமாய் இலங்குவதும் அன்பு!
***

அன்புக்கு நிகர் எதுவுமில்லை
அதனை மிஞ்சிய சக்தி ஒன்றுமில்லை
இதனை உணர்ந்தால்
உலகில் நரகம் இல்லை!!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (வெல்லபதியான்), ஈழம்

# முழு ஜென்மம்

உயிருடனே இருக்க ஆசை கொள்கிறேன்
உன் நினைவு இன்றி
கண்டு கொண்டது எல்லாம்
கானல் என்று அறிந்தும்
ஆசை கொண்டது ஏனோ
இந்த பேதை மனம்.



நான் தொடங்கிய
கண்ணாம்பூச்சி ஆட்டத்தில்
நானே மறைந்து விட்டேன்
நானறியாமல்.

வெளிவர ஆசை கொண்டும்
வழி தெரியாமல் போய்விட்டது
என் காத்திருப்பின் பத்திரமாய்
மீண்டுமொறு முறை
கண் முன் வந்து செல்லமாட்டயோ.

விழியோர ஒரு துளி நீர் கசிவுடன்
முழுமையாய் கண்களால்
நிராடி கொண்டு விடை தருகிறேன்
முழுமையாய் இந்த ஜென்மதிற்கு.

கவிஞர் என். ரிஷானா, ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

# துளிகள்

பயணக் காட்சிகள்
பெரும்பாலும்
ரசிக்கப்படுவது
அலைபேசி
கேமராக்களில்
மட்டுமே

பூமி நோக்கி விழும்
மழைத்துளிகளின்
நம்பிக்கையில்தான்
வெட்டப்பட்ட குழிகளில்
காற்று
விதைகள் தூவுகிறது



வீட்டுத் தோட்டத்தின்
மருதாணி
வாசனையில் மட்டும்
இன்றும்
ஒட்டிக்கொண்டிருக்கிறது
அன்றைய தீபாவளி

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# ஆசிரியர்

எழுத்துதனை அன்பால் விதைத்து
விதையாய் இருந்த மாணாக்கரை
விருட்சமாய் மாற்றி

ஏணி மேல் ஏற்றி
உயரச் செல்லும் அழகுதனை
கீழ் நின்று ரசித்த

ஆசிரியப் பெருந்தகைகளே
நீங்களன்றோ எழுத்தறிவித்தவர்கள்!

எழுத்தறிவித்தவன் இறைவன்
என்ற கூற்றும் இங்கே
நிதர்சனம் தான் நிதமும்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# உண்மையான பாசம்

உண்மையான பாசம்
வைத்து உன்னையே
நிழலாக தொடர்ந்து வருவது
பேச யாரும் இல்லை என்பதாக
பொருள் கிடையாது.
உன் அளவுக்கு வேறு
எவரும் அவள் மனதில்
இடம் பிடிக்கவில்லை
என்பதாககொள்



நிராகரித்து சென்றாலும்
காலை சுற்றும் பூனையாக
உன்னை சுற்றிவருவது
இழக்கவே கூடாது என்றே

விலகி நிற்பது நீ வேண்டாம்
என்றல்ல வேண்டும் என்றே
வழிவிட்டு விலகி நிற்கிறேன்
அதீத அன்பு வற்புறுத்தி பெறுவதல்ல
அவர் விருப்பத்திற்கு ஏற்ப
எட்டி நின்று ரசிப்பதே

கவிஞர் ஞா. கோமதிதேவா, பண்ருட்டி

# ஒற்றைப் பாதையின் பயணம்

ஊர்களை இணைத்திடும் ஒற்றைப் பாதை
விரிகிறது கண்முன்னே! உறவுகள் கைவிட
வேறு வழியின்றி, வழிதேடி நடக்கின்றார்!
கட்டிய துணியொடு, தடுமாற்றம் தவிர்க்க
கையில் கைத்தடியும் கொண்டவராய் நடக்கின்றார்!
எளிய பாதைதான்! எளிதல்ல பயணம்!
ஒருவனை வலிமையாக்கிடும் ஒற்றைப்பாதை பயணம்!
கசப்பும் இனிப்பும் கலந்த பயணமிது!
வீசிடும் தென்றல் வெம்மை தணிக்கும்!
இசைபாடும் பறவைகள் செவிக்கினிமை சேர்க்கும்!
கனவுகளின் வலிமை கண்ணீரைத் துடைக்கும்!
வானமெனும் போதிமரம் வழியிதுதான் என்றுணர்த்தி
முன்னேறச் செல்ல தன்னம்பிக்கை அளிக்கும்!
என்னை எனக்குள் சேர்த்திடும் பயணம்!
பயணமே வாழ்க்கையெனும் பக்குவத்தை அளிக்கும்!
பொறுமையை, துணிவை அளித்திடும் பயணம்!
ஒற்றைப்பாதையின் பயணம் வாழ்க்கைப் பாடம்!




கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# அந்த வார்த்தை

புரிதல் இல்லா
நாகரிகம் காணா
மனதை சல்லடையாக்கும்
யாரோ சொன்னதை
வைத்து யோசிக்கா
வேறு ஒன்றில்
கவனம் இருக்கையில்
அவசர பணியாய்
வெளியே செல்கையில்

இறுதியாய் ஆனால்
மிக முக்கியமாய்
பதில் மொழிக்கு
வாய்ப்பளிக்காத
உதட்டு மொழியின் போது
'நிறுத்து'



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

தூங்கவில்லையா
என்றொரு குறுஞ்செய்திக்காக
இரவு முழுவதும் விழித்திருக்கிறேன்
***

நன்றியை கொடுப்பதைவிட
பெறப்பார்
வாழ்க்கை அர்த்தமாகும்
***

வைத்த சாப்பாட்டை அருந்த மறுத்தது
பூனை
"புசி" கேட் என்றேன் சாப்பிட்டு விட்டது.
***

ருசித்து ரசித்து புசித்தால் எல்லாம்
நலம் வாழ முடியாது
பசித்தால் மட்டுமே.
***

ஊதியம் இல்லாவிட்டாலும்
போதிய உடல் நலம் பேணும்
நல்ல உழைப்பு
***

வானமாய் குணம்
உள்ளோருக்கு
தானமே தனம்
***

பூனை போன்ற ஸ்பரிசம்
குணம் தான் குரங்கு
அவள்.
***

என் காதலிக்கும்
என் தாய் மொழி
என்பது வரமாய்.
***



வீட்டு உண்டியலில் காசு சேர்த்தாலும்
சாமிக்கு சேரும் சிலசமயங்களில்
அம்மா எடுத்தால்
***

100 நாள் வேலை
அர்ச்சகருக்கும்
பொருந்திவிட்டது

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# அனுபவங்கள்

ஒரு நாளில்
கிடைத்த அனுபவங்களைத்
தாங்கிக் கொண்டு
துஞ்சுவது கடினம் தான்!
எத்தனையோ
கனவுகள் வருகின்றன.
அவற்றை எண்ணவும் முடியாது,
நினைக்கவும் முடியாது,
தூக்கத்தின் ஆழத்தில்
அடங்கி விடுகின்றன.



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை



சிங்கப்பூரிலிருந்து இறங்கிய விமானப்பறவையிலிருந்து இறங்கிய அரசு "வெளியே வருகிறேன். ஏர்ப்போர்ட் வாசலுக்கு வா." என்று ஓட்டுநருக்கு ஆணை கொடுத்து விட்டு வாசலுக்கு வந்ததும் ஏறிக்கொண்டான்.

ஓட்டுநர் திரும்பிப் பார்த்த போது "ஆங்... முல்லுண்ட் மகாகவி காளிதாஸ் அரங்கத்துக்கு போப்பா" என்றான்.

விமான நிலையத்தின் வெளியே உலோக விளக்குகள் இரவை விரட்ட முயன்று கொண்டிருந்தன.

எதிர்பாராத விதமாக அங்கே பெரிய போகுவரத்து தடையாகி நின்று கொண்டிருந்ததால் அலைபேசியை எடுத்து "மிஸ்டர் ஜேம்ஸ், தின விடியல் ஆசிரியர்தானே பேசுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஆம் சார். சொல்லுங்கள்."

"இங்கே கொஞ்சம் டிராஃபிக் ஜாமாகி விட்டது. நீங்கள் நிகழ்வை ஆரம்பியுங்கள். வந்து விடுகிறேன்."
"ஆங்... சரி சார்."

"நாம் ஏற்கெனவே பேசிக்கொண்ட படி என் வீட்டிற்கு...என் அப்பா அம்மாவிற்கு செய்தி போயிருக்காது என நினைக்கிறேன்."

"வாய்ப்பில்லை சார். உங்கள் பெயர் போடாமல் செய்திகளும் விளம்பரங்களும் போட்டிருந்தால் அவர்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை."

"சரி, நான் இன்னும் அரைமணி நேரத்தில் அங்கே இருப்பேன். முதல் அமைச்சர் வந்தாச்சா?"

"இன்னும் இல்லை சார். அவரும் சரியாக அரைமணி நேரத்தில் வருவதாக அவர் உதவியாளர் தொலைபேசியில் செய்தி சொன்னார்."

"சரி. " என்று கூறி விட்டு, குறிப்பெடுத்துக்கொண்ட பேப்பரை எடுத்து என்ன பேச வேண்டும் என ஒரு முறை ஒத்திகை செய்து கொண்டான்.

'தின விடியல்' மற்றும் மராத்திய மாநில எழுத்தாளர் மன்றம் இணைந்து நடத்தும் 'தமிழ் இளம் வியாபாரக் காந்தம்' விருது வழங்கும் விழா என பெரிய பதாகை அரங்கின் முன்னும் மேடையிலும் மின்னியது.

நிறைய தமிழ் அன்பர்களும், வியாபாரிகளும் ஆங்காங்கே நின்று "இதென்னப்பா ஆள் பேர் கூட போடாமல் இவ்வளவு சஸ்பென்ஸாக வைத்திருக்கிறார்கள்" என்று பேசிக் கொண்டிருந்தனர்.

முதலமைச்சர் கார் வந்து விட, முன்னும் பின்னும் துப்பாக்கி ஏந்திய காவலர் புடை சூழ முதல்வர் அரங்கத்திற்குள் நுழைய பின்னால் காரில் வந்து இறங்கிய தமிழரசைப் பார்த்த ஜேம்ஸ் , "சார் வாங்க. முதல்வர் வந்தாச்சு. மேடைக்கு போயிடலாம்." என்றார்.

"கொஞ்சம் நெர்வஸாக இருக்கிறது. நான் வேண்டுமென்றால் முன் வரிசையில் அமர்ந்து கொள்ளட்டுமா?" என்றான் அரசு.

"அது நன்றாக இருக்காது. முதல்வருக்கு அடுத்து உங்களுக்கு இருக்கை அமைத்திருக்கிறோம். வாருங்கள்" என அழைத்துக் கொண்டு சென்றார்.

உள்ளே வந்து மேடையில் அமர்ந்து முதல்வருக்கு அறிமுகமாகி கை குலுக்கிக் கொண்டு சிரித்தவாறு திரும்பிய போது கடைசி வரிசையில் அப்பாவின் நண்பர் பாபு தென்பட்டார். நிகழ்வு முடிவதற்கு முன் சொல்லாமல் கிளம்பிவிட வேண்டுமென நினைத்துக் கொண்டான் அரசு.

மேடையில் பலர் பேசிக்கொண்டிருக்க அடுத்ததாக "நமது இளந்தலைமுறை புதிய தமிழ் இளம் பிஸினஸ் மேன் திரு. தமிழரசு ஜே.கே. அவர்களுக்கு அவருடைய தந்தையும் தாயும் விருது வழங்குவார்கள்" என்று மேடையில் அறிவிப்பு வர

கொஞ்சம் குழம்பிப் போன அரசு திரும்பிப்பார்த்தான்.

மேடையின் பின்னால், உள்ளேயிருந்து அவனுடைய அப்பாவும் அம்மாவும் வந்து கொண்டிருக்க" மும்பையின் மிகப்பெரிய பிஸினஸ் மேன் திரு.ஜே.கே., மற்றும் அவரது மனைவியார் திருமதி.ராணி ஜே.கே. இருவரும் இணைந்து முதல்வரும் கலந்து கொள்ள இப்போது திரு.தமிழரசு அவர்களுக்கு இந்தச் சிறந்த விருதை வழங்குகிறார்கள்." என திரும்பவும் அறிவிப்பு வர உள்ளே அமர்ந்த கூட்டம் மொத்தமாக எழுந்து கை தட்டி அமர்க்களப் படுத்த, மெதுவாக நழுவி விடலாம் என்று வேகமாக மேடையிலிருந்து இறங்கினான் அரசு.

"எங்கேடா போறே. வா. " என எதிரே வந்த அப்பா ஜே.கே. அவனை மேடைக்கு இட்டுச் சென்றார்.

விருதை எடுத்து ஜேம்ஸ் முதல்வரின் கையில் தர அவருடன் ஜே.கே. மற்றும் ராணியும் விருதைப் பிடித்துக்கொள்ள கண்ணீருடன் வேறு வழியில்லாமல் 'தான் மாட்டிக்கொண்டோம்' என்று உணர்ந்தவாறு அம்மா அப்பாவை பார்த்துக் கொண்டே விருதை வாங்கினான்.

புகைப்படக் காரர்களும் வீடியோ காரர்களும் போட்டிப் போட்டு வித விதமாகப் போட்டோ எடுத்துத் தள்ள, அரங்கமே கைத்தட்டலில் அதிர்ந்த வேளையில் திருமதி. ராணி ஜே.கே. எதிர்பாராத விதமாக மயங்கி விழுந்தாள்.

அதைக் கவனித்த தமிழரசு "அம்மா" என்ற அலறலோடு, கீழே விழுந்த அவளைத் தூக்கி "தண்ணீர் கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, வாங்கி அவள் முகத்தில் தெளித்து அவள் மயக்கம் தெளியாததால் "விலகுங்கள்" என்று சொல்லி அன்னையைத் தூக்கிக்கொண்டு காருக்கு ஓடினான். பின்னாலே ஜே.கே.யும் பாபுவும் கை கொடுத்துக்கொண்டே அவனோடு ஓடினர்.

தொடரும்...

# வாழ்க்கை ஒரு தேடல்

## கட்டுரை



இம்மண்ணில் பிறக்கும் ஒவ்வொருவரும் அறியாமையாகத்தான் பிறக்கின்றனர்.
காலம் செல்ல செல்ல பல புதிர்கள் அவர்களை அனுகும். ஒவ்வொரு புதிருக்கும் பதில் தேடி கண்டறிகையில் மீண்டுமொரு புதிர் உருவாகும் இப்படித்தான் இவ்வாழ்க்கை தேடல் நம் நிரந்தர பயணம். உண்மையில் இப் புதிர் நிறைந்த வாழ்விற்கு பதிலே இல்லையா ? என்ற கேள்வி பல மனங்களை அண்டியிருக்கும் வாழ்க்கை என்றால் என்ன? என்ற கேள்வியை நாம் எழுப்பினால் ஒவ்வொருவரின் கருத்தும் வேறுபடும் ஏன் தெரியுமா? அவர்கள் அனைவரினதும் தேடல் வேவ்வேறாக இருக்கும் அதனால் தான் கருத்தும் வேறு படும். ஒரே வயது பாடசாலை செல்லும் பிள்ளைகளிடம் உங்கள் விருப்பமான உணவு எது என்று கேட்டால் ஒரு பிள்ளை சோறு என்றால் இன்னொரு பிள்ளையிடமிருந்து பிட்டு என்ற பதில் வரும் குழந்தைகள் மட்டுமன்றல்ல நம் விருப்பங்களும் எவ்வளவு வித்தியாசமானவையாக இருக்கின்றன. அது போல் தான் ஒவ்வொருவரின் தேடலும் பல வகைப்படும்.

தேடல் என்றால் என்ன ? என்று கேட்டால் பேராட்டம் ,கொண்டாட்டம் போன்ற பதில்கள் வரும் சிலர் அதை விறும்பி செயற்படுவார்கள்,சிலர் விருப்பமின்றியும் வேறு வழி இல்லாததால் செயற்படுவார்கள் இவைதான் தேடல் பற்றிய கருத்துகள் வேறு படுவதற்கான காரணம்.

உண்மையில் தேடல் என்பது தன்னைத்தானே கண்டறிவது தான்
இருவருடத்திற்கு முன் நாம் எப்படியிருந்தோம் இப்போது எப்படியிருக்கிறோம் என்று சற்று சிந்தித்துப் பார்த்தால் நிச்சயம் மாற்றம் புரியும் வாழ்க்கை நொடிக்குள் பல பாடங்களை கற்ப்பித்து விடுகிறது. அந்த பாடங்கள் தான் ஒவ்வொருவரின் மாற்றத்திற்கும் காரணமாய் அமைகின்றன. அதாவது நிறைய தடவை முயற்சித்தும் ஒரு போட்டியில் தோல்வியடைந்து மனமுடைந்து போகும் தருணத்தில் யார் சொல்லையும் நம் மனம் ஏற்காது அந்நேரத்தில் நம் மூலையும் செயற்படாது

கவிஞர் ரஸ்னா ரமீஸான், அக்குறணை, கண்டி(இலங்கை)

# வாழ்க்கை ஒரு தேடல்

## கட்டுரை

எத்தனை ஆதரவுகள் நம்மை சுற்றியிருந்தாலும் நம் கண்களுக்கு நாமடைந்த தோல்வி மட்டுமே தெரியும் ஆனால் நொடிகளும் , நாட்களும் கடக்கையில் நம் மனம் அச்சிக்கலான தருணத்திலிருந்து விடுபட எத்தணிக்கும். நம் மூளை சிந்திக்க ஆரம்பிக்கும் அத்தோல்வி ஏற்பட்டதன் காரணம் நமக்கு புரிந்து தோல்வியின் பின் தான் ஒரு புரிதல் ஏற்படும்.

நம் இத் தோடல் நிறைந்த வாழ்வில் நாம் எதிர்பார்க்காத பலரை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கலாம் அவர்களிடமிருந்து ஒரு அன்பு,அனுபவம்,அறிவு,தெளிவு என ஏதாவது ஒன்றில் நம் தேடல் இருக்கும். சில சமயம் நாம் சந்திக்கும் ஒருவர் நம் தேடலுக்கு வழிகாட்டியாக அமைய கூடும் புதிய ஐடியாக்கள் தரலாம் , நம் தவறுகளைச சுட்டிக் காட்டலாம் நம் இலக்கை அடை தூணாயிருக்கலாம்.
இன்னும் சிலர் நம் பலம் பலவீனங்களை நமக்கு உணர்த்தலாம் இல்லையென்றால் பிறரின் அனுபவங்கள் நமக்கு அறிவுரையாக மாறலாம் இன்னும் சிலர் புதிராக இருப்பார்கள் அவற்றிற்கான பதிலை நாம் தேடுகையில் பல தெளிவுகளை நாம் பெற முடியும்.

வாழ்க்கையில் அனைத்துமே தேடல் தான் நாம் ஒரு வினாக்கான பதிலை புத்தகத்தில் தேடினால் அத்தோடு அது முடிந்து விடுகிறது.ஆனால் வாழ்க்கைப் பயணத்தில் எழும் கேள்விகளுக்கு பதிலும் அப்பயணத்தில் தான் கிடைக்கும் ஒரு பதில் கிடைக்க மீண்டுமொரு புதிரெண அப்பயணம் தொடர்ந்திடும். அதாவது இன்றைய காலகட்டத்கில் ஒரு வயதிற்கு பின் வேலை என்பது மிக அத்தியவசிமானதாக மாறி விட்டது. பொதுவக ஆண் பெண் இரு பாலாரும் வேலைக்கு செல்லும் கால கட்டம் இது அப்படி முதல் வேலையை தேடுவதை தேடலாக கொண்டு அவ்வேலை கிடைத்தவுடன் அத்தேடல் நின்று விடுகிறதா ? இல்லையே வேலை கிடைத்த பின் அவ்வேலையின் கற்றல் தேடல் ஆரம்பமாகிறது அதன்பின் நம்மை எப்படி இதன் மூலம் வளர்த்து கொள்வதென்று தொடராய் தேடல் தொடர்ந்து கொண்டே போகும்.

இப்பயணத்தில் கிடைக்கும் இன்பங்களை ரசித்து துயரங்களின் மூலம் கிடைக்கும் புரிதலை அனுபவமாக கொண்டு செயற்படுவதே யாதார்த்தமாகும்.
ஆகவே தேடல் என்பது நிரந்தரமானது அத்தேடலில் மூலம் பெரும் பயன்களால் நாம் நம்மை உணர்ந்து கொள்வதே தேடலிற்கான பதில்.

கவிஞர் ரீஸ்னா ரம்ஸான், அக்குறணை, கண்டி(இலங்கை)

## தேடல் - 04

**தலைப்பு ; ஏன் எனும் கேள்விக்குள் வீழ்ந்த நாட்கள்**



மனிதன் வாழ்வில் சந்தோசத்தை விடுத்து, கஷ்டத்தை அணுகும் தருணம், அவன் மிகுந்த உணர்ச்சி வீழ்ச்சியின் அடையாளமாக இருக்கிறான். ஒரு இழப்பு, அதாவது, தனக்குப் பிடித்த நபர் மரணித்துவிட்டால் — நாட்கள் கடந்து சென்றாலும், அவன் அந்த இழப்புக்குள் சிக்கி, அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறான்.

அவனால் அந்த இழப்பை சட்டென்று ஏற்று, தன்னை பழகிக்கொள்ள முடியாது. அவன் அந்த நினைவுகளின் ஊசியிலே தொங்கும் ஒரு வாழ்க்கையை வாழ்கிறான்.

**இந்த நேரத்தில் அவன்:**

அடக்க முடியாத கோபத்தோடு, எல்லாவற்றிற்கும் எதிர்பாராத முகபாவனையோடு, தன்னைத்தானே தாழ்த்திக்கொண்டு, எதற்கெடுத்தாலும் அழுதுகொண்டும் அல்லது கடுமையோடு அனுக முடியாமல் இருக்கிறான்.

"ஏன்?" இந்தக் கேள்வி — அவன் மனத்தில் முற்றிக்கிடக்கிறது. அதற்கான காரணம் தெரியாத உணராமையின் விழைவில், அவன் செயலில் வீழ்ச்சி ஏற்படுகிறது.

**உதாரணம்:**

ஒரு தாய் தன் பிள்ளையை இழந்த பிறகு, அவள் இடைவிடாது கேட்கும் கேள்வி இதுதான்: "ஏன் என் பிள்ளையே? ஏன் அவன்தான்?" அவளின் குரல் காற்றிலும் நிலத்திலும் ஒலித்தாலும், அதற்குப் பதில் யாரிடமிருந்தும் வரவில்லை. அந்தக் கேள்வியே அவளின் வாழ்வின் வலி ஆகிறது.

கவிஞர்; சீ.ஷஹ்னாஸ் பேகம்; முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

## தேடல் - 04

பொதுவாக அனைவரித்திலும் ஏன் என்வாழ்வு மட்டும் இவ்வாறு என்றும் ஏன் எனக்கு பிடித்ததைமட்டும் இழக்க நேர்கிறது என்றும் புலம்பிக்கொள்வதோடு, அவன் அவனையே ஒரு வட்டத்துக்குள் பூட்டி, தனிமைக்குள் அகப்பட்டு விடுகிறான். அந்த வட்டம், அவன் வாழ்வின் எல்லா உறவுகளையும் துழைத்து தள்ளி, அவனை அனாதைதைப்போல் நிற்க வைக்கிறது.

தனிமையை அவன் முதலில் தவிப்பாக உணர்கிறான், பிறகு அதையே தவமாய் ஏற்றுக்கொள்கிறான். அந்த தனிமையை நேசிக்கத் தொடங்கியதும், பிறர் அவனை விட்டுப் போனது அவன் தேர்வு தான் என நினைக்கத் தொடங்குகிறான்.

பின்னர், தனிமைதான் ராஜா. அது அவனது மௌனத்தை நடத்துகிறது. அவன் வாழ்வின் மீதமுள்ள ஒவ்வொரு கணமும், அவனைப் பார்த்து சிரிக்கிறது — ஏளனமாய். ஆனால், அவன் அதற்கும் பழகியவன். அவனை விட்டு தனிமை மட்டும் விலகாது.

கூடுக்கட்ட தெரியாத குயில், காகங்களின் கூட்டில் முட்டையிட்டுவிடும்... அதைப்போல, மனித இயல்புக்குள் குழப்பம் எனும் வியாதி நுழையும்போது, அவன் தனிமையின் பிடிக்குள் மாட்டிக்கொள்கிறான். மனிதன், தன்னிடம் இருக்கும் யாரையாவது இழந்தாலும், அல்லது, தன்னை யாரும் புரியாமல் தவறாக நடத்தினாலும், அவனின் மனம் பாதிக்கப்படுகிறது. அந்த பாதிப்பில், அவன் தனித்து இருக்கத் தொடங்குகிறான். முதலில் அது "மாற்று விருப்பம்" போலத் தோன்றும். பின்னர் அது வாடிக்கையாக மாறி, அவன் உறவுகளை விட்டு விலகி, உணர்வுகளை அடக்கிக் கொள்ளும் பழக்கத்துக்குள் சென்று விடுகிறான்.

இவ்வாறான ஒரு மனிதன், வெருச்சோடிய சாலையில் தனித்து நடக்கிறான். ஆனால், தனியாக இல்லை என்ற எண்ணத்தில், தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறான். தனிமையே தோள்சாய, அவனுக்கு துணையாக தெரிகிறது. அந்த சாலை -அவனது உணர்வுக் கதையை கேட்பது போல... அவன் அதில் தன் பயணத்தையும் கதையையும் சொல்கிறான்:

"எதை இழந்தேன்? எதனால் இழந்தேன்? ஏன் இப்படி நடந்தது? இப்போது என்ன செய்வேன்?"

கவிஞர் சஃஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# வலியின் தேடலில்

## தேடல் - 04

"இந்தக் கேள்விகள் ரணபட்ட மனதை அரித்துக் கொண்டே இருக்கும்.
ஆனால், மனித மனம் என்றும் அப்படியே இருட்டில் வீழ்ந்து கிடப்பதில்லை.
ஒரு சிறிய ஒளிக்கீற்றுக்காக அது ஏங்கிக்கொண்டே இருக்கும்..."
அவ்வாறான மனம் தன்னம்பிக்கையான வார்த்தைகளை கேட்கும் போது வலு பெறும் ..

**நம்பிக்கை**

தனிமை என்பது — பதிலில்லாத வினா அல்ல... ஆனால் பதிலின்றி நீண்ட நாளாக உயிரோடு வாழும் மௌனமாகி விட்ட மனம்தான். ஆனாலும், அந்த மௌனத்தைத் தாண்டி, ஒருநாள் ஒருவர் புது ஒளியாக நம் வாழ்வில் வந்து சேர்கிறார். அவர் நம் மனக் கேள்விகளுக்கு பதில் தர முடியாவிட்டாலும், அவரின் வருகை, "வாழ வேண்டும்" என்ற புதிய காரணமாக மாறி விடுகிறது. ஏன் எனும் வினா நிழலாய் நின்றாலும், வாழ்வின் நடை நிற்காது முன்னேறும். தனிமை கதவை மூடியாலும், நம்பிக்கை கதவைத் திறந்து விடும்.

ஆகவே நீங்களாயினும் இரு தரப்பு காரணத்தில் ஏதுவாக இருந்தாலும் உம்மை தயார் செய்யலாம்.

1) தம்மை சூழ உள்ள யாரொருவர் தனிமையை அன்றிப்பிடிப்பதைக்கண்டு விட்டால் எனக்கென என்று கண்டும் காணாது நகர்வதை நிறுத்தி அவரை அனுகி தோள் தொட்டு பேச முயலுங்கள்.

2)அவர்கள் உங்கள் தொடுகையில் வித்தியாசமான ஒரு உணர்வை அடைவர் அப்போது நீங்கள் மௌனமாக இருந்தாலும் உங்கள் அருகாமைக்கூட அவர்கள் தனிமை வலையத்தை உடைத்து விடும் ..

3)தனித்திருப்போருக்கு அணைப்புக்கூட மா மருந்து தான் பொதுவாக வேலை விட்டு வரும் தந்தையை பெண் பிள்ளைகள் பூரிப்பில் கட்டி அணைத்தல் உண்டு இது பெண்பிள்ளைகளின் வரமான செயல்.

4)நம் பார்வையில் அது அவளின் பிடித்தமானவரை நெடுநேரம் கழித்து பார்த்து விட்ட சந்தோசத்தால் எனலாமில்லையா?

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

## தேடல் - 04

5)ஆக உற்று நோக்கினால் நாளு சுவருக்குள் அடைப்பட்டு தெரியாதவர்களிடம் கத்தி கூச்சலிட்டு அல்லது தெரியாத்தனத்தால் தமது மேலதிகாரிடத்தால் ஏச்சுக்கள் வாங்கி வரும் ஆண்மகன் அழுத்தம் படிந்த மனதோடு தான் வீடு வருவான். இவன் கடப்பவரிடம் அவ்வழுத்தத்தை கோபமாக காட்டினாலும்

6)தன் பிள்ளையிடம் அவ்வாறு நடந்தாலும் பிள்ளையின் அழுகையில் மனமாறி பிள்ளையை அணைத்து கொஞ்ச தொடங்கும் போது கடந்த கசப்பான சூழலை மறக்க வாய்ப்புண்டு..

................

1) நீங்கள் தனிமையோடு தொடர்புடையவராக இருந்தால் வலுசேர்க்கும் பாடல்வரிகளை கேட்கலாம்.
2) யாரோடு இருந்தால் கலகலப்போடு இருப்பீரோ அவர்களின் அருகாமையில் இருக்கலாம்.
3) அழகான இயற்கை வளமான இடச்சூழலை நெருங்கி உம் மனதை பொருத்திடலாம்.
4) ஓயாது அடிக்கும் அலைகளுக்கு மனதின் இரைச்சலை நிறுத்த தெரியும் அதனால் கடற்கரையில் சட்டு ஆரவாரப்படுத்தலாம்.
5)வாய்விட்டு சிரிப்பை தரும் நகைச்சுவை சினிமாவை தேடிதேடி கண்டுக்கழிக்கலாம்.
06) சிலநேர நல்ல தூக்கமும் நம்மை சரிப்படுத்திடும்
நன்றாக தூங்கி உம் மனநிலையை மாற்றிடுங்கள்..

மொத்தத்தில் உங்களை சூழ்ந்த உறவுகளோடு ஒற்றுதலோடு இருங்கள். மனம் விட்டு பேசுங்கள்.

" நடந்து முடிந்தவைகளை மாற்ற முடியாது நடந்தவைகளை ஏற்க பழகிக்க முயன்றால் போதும் "

" தனிமை என்பது என்பது ஆட் கொள்ளி நோயை விட மோசமானது ஆதலாம் பெரும் சிரமம் கொடுத்து உம்மை தனிமை படுத்தாது காத்திடுங்கள் உம்மை சூழ்ந்தோரையும் காத்திடுங்கள்"

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி,புத்தளம் (இலங்கை)

# பேராசிரியர் இரா. சாரங்கபாணி

## கட்டுரை

### பிறப்பு, கல்வி

இரா.சாரங்கபாணி சிதம்பரத்திற்கு அருகில் உள்ள தேவங்குடியில், செப்டெம்பர் 18, 1925 அன்று பொ.இராசகோபால் மழவராயர், சனமாலிகை அம்மையார் ஆகியோருக்குப் பிறந்தார்.



தேவங்குடியில் தொடக்கக் கல்வியையும், புவனகிரி கழக உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரையிலும், சிதம்பரம் பச்சையப்பன் பள்ளியில் ஆறாம்படிவம் வரையிலும் பயின்று, 1942-ல் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1947-ல் புலவர் பட்டமும், 1949-ல் இளநிலை இலக்கியப்பட்டமும் பெற்றார் சென்னைப் பல்கலைக் கழகத்தில்.
1955-ல் முதுகலைப் பட்டமும், 1962-ல் முதுநிலை இலக்கியப் பட்டமும், 1969-ல் முனைவர் பட்டமும் பெற்றார்.

### தனி வாழ்க்கை

ஜூன் 15, 1949 அன்று குடிமூலை என்ற ஊரில் தனலட்சுமி அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். அவரது மகன் அந்துவன் இங்கிலாந்து நாட்டில் மருத்துவராகத் தொழில் செய்கிறார்.

### கல்விப்பணி

1949-ம் ஆண்டில் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியேற்று, பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் உயர்ந்தார்.
1979 முதல் மூன்றாண்டுகள் உயராய்வு நடுவத்தின் இயக்குநராகவும் இருந்தார். இருபதாண்டுகளுக்கு மேல் வ.சுப. மாணிக்கனாருடன் பணி செய்யும் வாய்ப்பைப் பெற்றார்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை, கண்டி (இலங்கை)

1982-1986 தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணியேற்று, தமிழ் இலக்கியத்துறைத் தலைவராக உயர்ந்தார்.

1988-1994 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் திருக்குறள் ஆய்வகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பாடநூற் குழுவில் பாடங்களை வடிவமைத்தார்.

தமிழக மற்றும் கேரளப் பல்கலைக்கழகங்களில் இயற்கை விருந்து, குறள் விருந்து, பரிபாடல் திறன், சித்தர் இலக்கியங்களில் திருக்குறள் ஆகியவை பாடநூல்களாக இடம்பெற்றுள்ளன.

## இலக்கியப் பணி

தமிழ்ப் பல்கலைக்கத்தில் ஆசிரியப்பணி புரிந்த சமயம் சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் (இரு தொகுதிகள்) எழுதி வெளியிட்டார்.
காரைக்குடித் தமிழ் சங்கத்தில் துணைத் தலைவராக பல சங்க இலக்கிய வகுப்புகள் நடத்தியளித்தார்.
சிதம்பரம் தில்லைத் தமிழ் மன்றத்தில் மூன்றாண்டுகள் திருக்குறள் வகுப்புகளும், புறநானூறு வகுப்புகளும் நடத்தியுள்ளார்.
யாழ்ப்பாணம் திருக்குறள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்.
வ.சுப.மாணிக்கனாரின் ஆலோசனையின் பேரில் திருக்குறளுக்கு இதுவரை வெளிவந்துள்ள உரைவேறுபாடுகளைத் தொகுத்து, தக்க உரை எது எனக் காரணங்களோடு சுட்டி திருக்குறள் உரைவேற்றுமை நூல்களை எழுதினார்.

## இறப்பு


ஆகஸ்ட் 23, 2010 அன்று சாரங்கபாணி சிதம்பரம் அண்ணாமலை நகரில் உயிர்நீத்தார்.

கவிஞர் ரஸ்னீரா ரம்ஸான், அக்குறணை, கண்டி (இலங்கை)

## படைப்புகள்

இயற்கை விருந்து (1962)
குறள் விருந்து (1968)
பரிபாடல் திறன் (1972)
A critical Study of Paripatal (1984)
A Critical Study of Ethical Literature in Tamil (1984)
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (இருதொகுதி) (1986)
திருக்குறள் உரை வேற்றுமை, அறத்துப்பால் (1989)
திருக்குறள் உரையாசிரியர்கள் (1991)
திருக்குறள் உரை வேற்றுமை, பொருட்பால் (1992)
திருக்குறள் உரை வேற்றுமை, காமத்துப்பால் (1992)
சங்கச் சான்றோர்கள் (1993)
வள்ளுவர் வகுத்த காமம் (1994)
புறநானூற்றுப் பிழிவு (1994)
மாணிக்கச் செம்மல் (1998)
திருக்குறள் இயல்புரை (1998)
சித்தர் இலக்கியங்களில் திருக்குறள் (1999)
திருக்குறள் பரிமேலழகர் உரைவிளக்கம் (2000)
சங்கத்தமிழ் வளம் (2003)
பரிபாடல் உரைவிளக்கம் (2003), கோவிலூர் மடம்
சங்க இலக்கிய மேற்கோள்கள் (2008)
சங்க இலக்கியப்பிழிவு (2008)
திருக்குறள் செம்மொழிப்பதிப்பு
பரிபாடல் செம்மொழிப்பதிப்பு




## நன்றி

https://tamil.wiki/
https://www.dinamani.com/

நாளை

# நமதே

## நீ யார்

## என்பதை

## உன் செயல்

## சொல்லும்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com